2006 ஜனவரி 25]

மேற்பட்டிருக்கின்ற அந்தத் தொழிற்சாலைகளுக்கு 25 இலட்சம் ரூபாய்—தளவாடங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்காக 15 இலட்ச ரூபாயும், அந்தத் தொழிற்சாலைக்கு மின்னாக்கி வாங்குவதற்காக 15 சதவிகிதம் மானியமோ அல்லது 5 இலட்சம் ரூபாய் மானியமோ, இதில் எது குறைவோ அதை வழங்குவதற்கும், அந்தத் தொழிற்சாலையிலே பாதிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பெண்கள் பணிபுரிவதாக இருந்தால், 5 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்குவதற்கும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக அம்மா அவர்கள் வழிவகை செய்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, மூன்று ஆண்டுகளுக்கு மின் சலுகை—அதாவது, முதலாம் ஆண்டிற்கு 30 சதவிகிதம் மின் சலுகையும், இரண்டாம் ஆண்டிற்கு 20 சதவிகிதம் மின் சலுகையும், மூன்றாம் ஆண்டுக்கு 10 சதவிகித மின் சலுகையும் வழங்குவதற்கு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப்போன்று ஒரு தொலைநோக்குத் திட்டம் தமிழகத்திலே மட்டும்தான் சிறப்பாக வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 105, திரு. கோவை தங்கம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

105—

மிளகு உற்பத்தி

*** 58003—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியார் அருகிலுள்ள சின்னார்பதி பகுதியில் மிளகு பரப்பு அதிகரிப்பு திட்டத்தின்கீழ், மலைஜாதி மக்கள் மூலம் மிளகு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர்

மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியார் பகுதியிலுள்ள சின்னார்பதி பகுதியில் மிளகு பரப்பு அதிகரிப்பு திட்டத்தின்கீழ் மலைஜாதி மக்களுக்கு மிளகு செடிகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. மலைவாழ் மக்களுக்கு சுயஉதவிக் குழுக்கள்மூலமாக மிளகு செடிகள் விநியோகம் செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை சட்டமன்ற தொகுதியில் சின்னார்பதி, பழையசர்கார்பதி, தம்மபதி, கோழிகமுத்தி, எருமைப்பாறை, வலைகளியூர், கூமட்டி, டாப்சிலிப் போன்ற பகுதிகளிலும், காடம்பாறை மாவடப்பு, காடம்பாறை வெள்ளிமுடி, சங்கரன்குடி, அட்டகட்டி, கீழ்புணர்ச்சி, கருமுட்டி, கவர்கல், பாலகனர், சேக்கல்முடி, பரமன்கடவு, உடும்பன் பாறை, ஆனைமுடி, சின்னக்கல்லார், சிங்கோனா, வில்லோனி, ஊசிமலை, அக்காமலை, கருமலை, மானாம்பள்ளி மற்றும் ஆழியார், நெல்லித்துறை, மன்னம் பகுதிகளிலும் மலைஜாதி மக்கள் மிக அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு வருமானத்தை ஏற்படுத்துகின்றவகையில், மிளகு பரப்பு அதிகரிப்பு திட்டத்தின்கீழ் மலைஜாதி மக்களுக்கு மிளகு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு, பரப்பளவை அதிகரிப்பதற்காக பெருமளவு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதி, ஆழியார் நகரைச் சுற்றிலும் உள்ள சின்னார்பதிக்கு அருகில் பில்சின்னம்பாளையம், அங்கலக்குறிச்சி, கரியாஞ்செட்டிபாளையம், ஜல்லிபட்டி, கம்பாலப்பட்டி, அர்த்தநாரிபாளையம், சோமந்துறை, தென்சித்தூர், தென்சங்கம்பாளையம், காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர் போன்ற ஊராட்சிகளும், மேலும், கோட்டூர், வேட்டைக்காரன்புதூர் ஆகிய சிறப்பு ஊராட்சிகளும் அருகில் உள்ளன. இங்கு பெருந்திரளாக, விவசாயிகள் குடியிருந்து வருகிறார்கள். விவசாயம் செய்து வருகிறார்கள். அருகில் உள்ள சின்னார்பதியில் மிளகு அதிகரிப்புத் திட்டத்தின்கீழ் அரசு நடவடிக்கை எடுத்து உதவினால், நிலங்களை ஒதுக்கீடு செய்து

2006 ஜனவரி 25]

உதவினால், அருகிலுள்ள கிராமங்களும் வளர்ச்சி அடையும். ஏற்கெனவே மலைஜாதி மக்கள் செய்து வந்த தேன் எடுத்தல், நெல்லிக்காய், புளி போன்றவற்றை இப்போது எடுப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. வனத்தில், முதலில் செய்த எந்தத் தொழிலையும் செய்யமுடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். மலைஜாதி மக்கள் வறுமையில் இருக்கிறார்கள். ஆகவே, மலைஜாதி மக்களுக்கு மிளகு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய, சிறுகடன் உதவி கொடுத்து மிளகு அதிகரிக்கும் திட்டத்தின்கீழ் தரிசு நிலம் அல்லது அவர்கள் குடியிருக்கும் வனப் பகுதியைச் சுற்றிலும் இடஒதுக்கீடு செய்து கொடுத்தால், மலைஜாதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைவார்கள். மேலும் அவர்களுக்குக் குடிநீர், தெரு விளக்கு, குடியிருக்க வீடுகள் போன்ற அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சின்னார்பதியில் மிளகு அதிகரிக்கும் திட்டத்தினை, மற்ற மலைஜாதி மக்கள் குடியிருக்கின்ற பகுதிக்கும் விரிவுபடுத்த முன்வருவார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழ்நாடு முழுவதும் வாசனைப் பயிர்களினுடைய பரப்பளவை நாம் எண்ணிப் பார்க்கின்றபோது 3,81,447 ஏக்கரிலே இன்றைக்கு வாசனைப் பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன என்பதையும், கோவை மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே 19,927 ஏக்கர் பயிரிடப்பட்டு வருகின்றது என்பதையும், அதோடுமட்டுமின்றி சின்னார்பதி பகுதியிலே மலைவாழ் மக்களுக்காக 25 சதவிகித மானியத்திலே இன்றைக்கு அந்த வாசனைத் திரவியங்களைப் பயிர் செய்வதற்காக, மிளகு உற்பத்தியை அதிகரிப்பதற்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மானியம் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும், நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, வருங்காலத்திலே மேலும் அந்த மிளகு உற்பத்தியைப் பெருமளவு சாகுபடி செய்வதற்காக நடவடிக்கை துரித அளவிலே மேற்கொள்ளப்படும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகவேலு.

[2006 ஜனவரி 25

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட உடுமலை தொகுதியிலே மலைவாழ் பகுதி அதிகமாக உள்ளது. 18 settlement areas அங்கு உள்ளன. அங்குள்ள மலைவாழ் மக்கள், பெண்கள் சுய உதவிக் குழுக்களை அதிகமாக ஆரம்பித்து, அங்கு சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறார்கள். அங்கே திருமூர்த்தி அணைப் பகுதியிலே பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 150 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலம் ஏற்கெனவே விவசாயத் துறையின்மூலமாக எண்ணெய் வித்துத் துறைக்கு எடுக்கப்பட்டுள்ளது. அந்த நிலத்தை அங்கே உள்ள மலைவாழ் மக்களுக்குக் கொடுத்து, அவர்களை அந்த மிளகு அதிகரிப்பு திட்டத்தின்மூலமாக வாசனைத் திரவியங்களான மிளகு போன்றவற்றை உற்பத்தி செய்வதற்குரிய ஏற்பாடுகளை, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், செய்வதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய நல்ல ஆலோசனையை மாண்புமிகு அம்மாவினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, தாயுள்ளத்தோடு அது பரிசீலிக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

106—

மாணவர் விடுதி

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

* **33509—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் புதியதாக பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?